ARYA DHARMAM REGD. No. M. 2913
TAMIL WEEKLY.

ஆர்யதர்மம்

சந்தா விபரம்.	
[தபால் சிலவுள்பட]	
ஜீவிய சந்தா ...	ரூ. 50
ஒரு வருஷ சந்தா ...	ரூ. 3
ஆறுமாத சந்தா ...	ரூ. 1½
தனிப்பிரதி ஓரணு	
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்	

வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

விளம்பர விகிதம்.	
ஒரு முழுப்பக்கம் ஒரு தடவை	ரூ. 20
அரைப்பக்கம் ஒரு தடவை	ரூ. 21
ஒருபத்தி ஒரு தடவை	ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு ஒரு தடவை	அணு 8
நீண்டகால விளம்பரங்களுக்கு தனி சார்ஜ்.	

பு-25 | கும்பகோணம் விக்கிரம-வருஷ ஆனி-மீ 7உ 1940-வருஷ ஜூன்மீ 20உ | ஸ-25

28 JUN 1940 MADRAS

வாரக் குறிப்புகள்

ஸ்ரீவத்ஸ. வே. ஸோ. சர்மா

அச்சுப்பிழை !! எவ்வளவு ஜாக்ரதையாக இருந்தாலும் அச்சுப்பிழை ஏற்படுவது ஸஹஜம் அதிலும் எனது அவஸரத்தாலும் தெளிந்த கை எழுத்தில்லாமையாலும் நமது ஆர்யதர்மம் எழுத்துப் பொருக்குபவர் படும்பாடு எனக்கே தெரியும். அதில் ஜோதிர் மடம் ஸ்வாமிகள் ஆலயப்ரவேசமநீதி என்கிறார் என்றெழுதினேன் அதை ஆலயப்ரவேசம் அநீதி [illegible] திருந்தால் நிருபர் ஆத்திரப்பட்டிரார்.

இதை எவரே மறுப்பர்? ஆலய பிரவேசத்தை அவர் எதிர்த்து ப்ரசாரம் [illegible] சய்ததை எவரும் மறுக்கமுடியாது. அது உலகப்ரஸித்தமானதே. அவர் அந்த வேலை செய்ததற்கு மிக்க நன்றி அளிப்போம் அதில் குறைகூற முடியாது.

கலப்பு மணத்தை ஆதரிக்கலாமா ? கூனூரிலிருந்து அவர் தேச நன்மைக்கு கலப்பு மணம் அவச்யம் அதை ஆதரிக்கிறோமென்று கூறிய விஷயமே கண்டிக்கப்பட்டது. இதுகூட பத்திரிக்கையில் தவறுதலாக வெளியானதாகி அவர் மறுப்பு எழுதியிருந்தால் வர்ணாச்ரம தர்மத்தில் சிறிதும் குறையாத பற்றுள்ளவராயின் அவரைக்கண்டிப்பது நம் வேலையில்லை!

சிறந்தராஜ தந்த்ரம்!! பிரெஞ்ச் நாடுபாரிஸ் எனும் ராஜதானியைச் சத்ரு இடித்துப் பாழாக்கா வண்ணம் காலி செய்து அதை ரக்ஷித்தது உயர்ந்த ராஜ தந்த்ரமாகும். ஜர்மனியின் ஆழ்ந்து வேரூன்றிய பலத்தை அறியாமலிருந்த "அம்பாஸிடர்" குற்றம் மன்னிக்கத்தக்கதல்ல !!

மந்திரிகள் மதியைக் காட்டகாலமிதே !! பிரிட்ஷ் மந்திரிகள் இத்துணை நாள் ராஜ்ய பாரம் நடத்தியது பெரிதல்ல. இச்சமயம் எல்லோரது பலாபலத்தையுமுணர்ந்து தக்கவாறு ஸாமார்த்யமாக நடக்க வேண்டும் ராஜ்ய தந்த்ர மறிந்தோர் பூர்ணஸாமர்த்யத்தைக் கையாள வேண்டும்.

அமெரிக்காவின் அநீதி !! போதிய யுத்ததளவாடங்களை நேச தேசங்களுக்கு அனுப்புவது மூலம் ஜெர்மெனியின் அநீதியை அது தேடிக்கொண்டுவிட்டது இனி ஏன் தாமதிக்க வேண்டும்? பிரஞ்ச் நாடு இக்கதிக்கு ஆளாகாமல் அமெரிக்கா செய்திருக்க கூடும்! இனியாவது நல்லவழியில் செல்லுமா?

மற்றுமோர் முறை பிரார்த்திப்போம் !! நமது சக்கரவர்த்தி ஜயமடையும் வண்ணம் ஒவ்வோர் மதத்தினரும் தனித்தனியாக தத்த மாலயத்தில் பிரார்த்தனை செய்ய வேண்டும்! தர்மத்திற்கு அவர ரசாங்கம் செய்த அநீதியை மறந்து, எல்லோரும் ஒன்று சேறுவோம் !

இந்தியாவில் எந்த எதிர்ப்பும் கூடாது !! ஜர்மனி மிகக்ரூரமாயிருப்பதால் இச்சமயம் எந்த வகையான எதிர்ப்பும் இன்றி எல்லா கக்ஷியாரும் எல்லா வகையிலும் பிரிடிஷாருக்கு பேருதவி புரிய வேண்டும்! தர்[illegible] [illegible]

ஆஸ்திக ஹிந்து மாதர் ஸங்கம்

மதுரை

சென்ற 14—6—40-ம் உ ஷை சங்கத்தின் பொதுக்கூட்டம் மதுரை தமிழ் சங்கம் ரோட் 55 நெ. பங்களாவில் அமைத்திருக்கும் ஸனாதன தர்ம வித்தியாலயத்தில் ஸ்ரீ பால மீனாம்பிகை முன்பாக மாலை 4 மணிக்கு நடைபெற்றது. அதற்கு மாது ஸ்ரீ கே. பொன்னம்மாள் தலைமை வகித்தார்கள். அப்பொழுது ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதாவது ஜுலைமாதம் கடைசி வாக்கில் மதுரை, ராமனாதபுரம், திருநெல்வேலி, திருச்சினாப்பள்ளி, தஞ்சாவூர் முதலிய ஜில்லாக்களின் ஆஸ்திக ஹிந்து மாதர் சங்க மகாநாடு நடத்த போவதாயும் அதற்கு கும்பகோணம் ஆஸ்திக ஹிந்து மாதர் சங்க அத்யக்ஷணி மாது ஸ்ரீ ஜெண்பகத்தம்மாள் அக்ராஸன பதவி வகிக்க போவதாகவும் தெரிய வருகிறது. மாது ஸ்ரீ யோகாம்பாள் அம்மாள் பிரேரேபித்தார்கள். அதை அம்மாளு அம்மாள், கே. மதுரவல்லி அம்மாள் ஆமோதித்தார்கள்.

சுமார் 300 ஸ்திரீ ரத்தினங்கள் விஜயம் செய்திருந்தார்கள். மாலை 6 மணிக்கு கூட்டம் கரகோஷத்துடன் முடிவுபெற்றது.

இந்த மஹாநாடு ஷை சங்கபிரசிடெண்ட் என். நடேசய்யர் யோகாம்பாள் அம்மாள் பங்களாவில் அமைத்திருக்கும் ஸனாதனதர்ம வித்யாலயத்தில் நடக்கபோவதாகவும் தெரிய வருகிறது.

எஸ். சுந்தரராஜன்.

காங்கிரஸ்காரர்களையும் சேர்க்கவேண்டும் ?

ஜய பிரார்த்தனை தினத்தில் நடந்த ஒரு கூட்டத்தில் பெரிய பாதிரியார் பேசினார். மத சிரத்தை குறைந்து விட்டதே யுத்தத்திற்குக் காரணமென்று அவர் சொன்னார்.

ஜர்மனியிலுள்ள ஜர்மன் குழந்தைகளுக்கும், யுவர்களுக்கும் கட்டாயமுறையில் மதபோதனை செய்யவேண்டு[illegible] [illegible] வழக்கம்[illegible] கொண்டு கட்டாய மதபோதனை கொடுத்தால் இந்தியாவிலும் ஹிட்லரிஸம் பரவாமல் தடுக்க முடியுமென்று நமக்கு ஓர் யோஜனை தோன்றுகிறது.

தண்டாங்கூரையில் கருடசயனத்துடன் விசுவஜித் மஹா ஹோம யாகம்

நிகழும் 10—6—40 முதல் அபூர்வமாய் அனுஷ்டிக்கப்படுகிற இந்த யாக விசேஷமானது அனேக ஸனாதன தர்ம பிமானிகளின் தூண்டுதலின் பேரில் அனேக யாகங்களைச் செய்து ஜகத் பிரசித்தரான ஸ்ரீ அப்பாத்துரை தீக்ஷிதர் அவர்களால் தண்டாங்கூரை கிராமத்தில் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. அனேக வித்வான்களும் ஆஸ்திக சிரோமணிகளும் வந்து ஷை யாகம் ஆரம்பித்த நாள் முதல் இன்றுவரை விடாமல் மழை பெய்துகொண்டிருப்பதே இந்த மஹாயாகத்தின் மேன்மைக்கு ஒரு நிதர்சனமாகும். (ஓ-நி)

WANTED.

Able and energetic hands to hold stocks in various centres. Must be capable of handling business tactfully and push through sales of high grown Nilgiri products of our Bengal Mattam Estate Teas Coffee, and Potatoes. Decent salary, Commission. Godown rent and other allowances liberal.

Apply to :-
The Franco—Trades (India) Society,
Royal Road, Mettupalaiyam.

தக்ஷிணாயந பிரதம விவாஹம்

மத்யஸ்தர்களின் நிர்ணயம்

தக்ஷிணாயநத்தில் பிரதம விவாஹாதிகள் செய்யலாமா என்ற விஷயத்தை விசாரிக்க வேண்டி கும்பகோணம் அத்வைத ஸபை ஒரு ஸப்கமிட்டியை நியமனம் செய்தது. பிரம்மஸ்ரீ பாஷ்ய பாவக்ஞ வெங்கடராம சாஸ்திரிகள் தக்ஷிணாயந விவாஹாநுக்ஞாபக்ஷத்தை ஆதரித்தும், பிர்மஸ்ரீ போலகம்ஸுந்தரேச சாஸ்திரிகள் அநுக்ஞை கிடையாதென்ற பக்ஷத்தை ஆதரித்தும் அபிப்பிராயம் வெளியிட்டதை ஏற்கனவே ஆர்யதர்மம் (மே-மீ 16-உ) 20 வது ஸஞ்சிகையில் பிரசுரித்தோம்.

மேற்படி இரண்டு அபிப்பிராயங்களையும் சாஸ்திரங்களைக் கொண்டு நன்கு பரிசீலத்து, மத்யஸ்தர்களாக நியமிக்கப்பட்ட பிர்மஸ்ரீ போலகம் ராமா சாஸ்திரிகள், தர்மரக்ஷாமணி ஸ்ரீ கே, பாலசுப்ரமணிய அய்யர் ஸம்ஸ்கிருத காலேஜ் பிரின்ஸ்பால் பிர்மஸ்ரீ ராமசந்திர தீக்ஷிதர் ஆகியவர்கள் கீழ்க்கண்ட தங்கள் வியவஸ்தா பத்திரத்தை அத்வைத ஸபைக்கு அனுப்பியுள்ளார்கள். அதன் விவரமாவது:—

"ஸ்மிருதி முதலிய கிரந்தங்களில் விவாஹ விஷயமாக தக்ஷிணாயந மென்கிற காரணத்தால் நிஷேதம் வசன பூர்வமாக காணப்படவில்லை. தக்ஷிணாயநத்தில் உள்ள சிலமாஸங்கள் மட்டும் விவாஹ விஷயத்தில் தடுக்கப்பட்டிருக்கின்றன, சில மாதங்கள் விவாஹத்திற்காக விதிக்கப்பட்டுமிருக்கின்றன. இது போல் உத்தராயணத் [illegible]

[illegible] த்க [illegible]

आषाढः [illegible]ष्ठपन्माधी [illegible]गशीर्षस्तथवच्च ।
चत्वारोदूषिता मासा वर्णसंस्कार कर्मणि ॥
मीने धनुषि सिंहेच स्थिते सप्ततुरंगमे ।
क्षौरमन्नं न कुर्वीत विवाहं मौंजिबंधनं ॥
मांघ फाल्गुन वैशाखज्येष्ठमासाः शुभावहाः ।
मध्यमौ कार्तिको मार्गशीर्षको निन्दिताः परे ॥
कार्तिकाश्वयुजौ मासावुद्वाहे दक्षिणायने ।
शंसन्ति श्रावणंचान्ये मासास्त्वन्येविगर्हिताः ॥

(வைத்ய–260–பக்கம்)

सर्वर्तवो विवाहस्य शैशिरौ मासौ परिहाप्य उत्तमंच नैदाघं । (ஆப-க்ரு. 2-12.)

सर्वे मासाविवाहस्य शुचितपस्तपस्य वर्जमित्येके॥

(போ-ஸூ)

माघ फाल्गुन वैशाख ज्येष्ठाषाढमृगाह्वयाः ।
षडेतेपूजिताः मासाः चातुर्वर्ण्यस्यनित्यशः ।
मार्गे मासितथा ज्येष्ठे क्षौरं परिणयंव्रतं ।
ज्येष्ठपुत्रदुहित्रोस्तु यत्नेनपरिवर्जयेत् ।

(ஜ்யோதிஸ்ஸாரம்-மதன பாரிஜாதம்)162 இது முதலான வசனங்களால் மேற்கண்ட விஷயம் வெளிப்படுகிறது.

ஆகையால் விசேஷமின்றி எல்லா மாதங்களுக்கும் அநேகமாக விதியும் நிஷேதமும் காணப்படுவதால் விகல்பம் நேரத்தெரிய அந்தந்தக்ருஹ்ய ஸூத்ரங்களை யநுஸரித்து அந்தந்த ஸூத்ராநுஸாரிகளுக்கு வியவஸ்தை ஆச்ரயிக்கத் தக்கது.

இது விஷயமாக நிர்ணய ஸிந்துவில் கூறப்பட்டுள்ளதாவது:—

"ये तु ज्यैगिषे माघादिविधयः ते गृह्यसूत्राणां द्विजपरत्वेन प्राबल्यात् शूद्रादि पराः"

என்று. க்ருஹ்ய கர்மங்களில் "யாவத் ஸ்வ க்ருஹ்யோக்தம்" என்று அபியுக்தர் பிரஸித்தியுளது. ஆதலால், மாக, பால்குண, ஆஷாடம், நீங்கலாக மற்ற எல்லா மாஸங்களும் ஆபஸ்தம்பியர்களுக்கு விவாஹவிஷயத்தில் முக்யகாலம். सर्वर्तवो विवाहस्य" என்று ஆபஸ்தம்பர் கூறுகிறாரன்றோ? ஆச்வலாயநிகளுக்கு

उदगयने आपूर्यमाणपक्षे - विवाहः-"

என்று வசனமிருப்பதால் உத்தராயணமே முக்யகாலமாகும். காதிராதிகளுக்கு மிப்படியே,

ஸ்வக்ருஹ்யோக்த முக்யகாலம் கிடைக்காத விஷயத்தில் "अनुक्तमन्यतः—" என்ற நியாயப்படி, ஸ்மிருதிகளிலும், இதர ஸூத்ரங்களிலும் சொல்லப்பட்ட உத்தராயணமாஸங்களை க்ரஹிப்பதுபோல தக்ஷிணாயநத்திலுள்ள மாதங்களும் கௌணமாக கிரஹிக்கத்தக்கவைகள்.

இப்படியில்லையேல் முன்காட்டிய ஸ்மிருதிவசனங்களுக்கு விஷயம் கிடைக்காமல் அவைகள் அநநுஷ்டாபகங்களாக ஆகிவிடும். அதுவோ அபேக்ஷிதமாயுமிருக்கின்றது. அவச்யம் அனுஷ்டிக்கப்பட வேண்டியவைகளாயுள்ள நித்யகர்மங்கள், முக்யகாலத்தில் செய்யமுடியாத ஸந்தர்ப்பத்தில் கௌணகாலமொன்றை அவச்யம் அபேக்ஷித்து நிற்கின்றன.

முக்யகாலாநுஷ்டானம் அசக்யமாயிருக்கும் போதுகூட சாஸ்திரவிதியானது அதை நிர்ப்பந்திக்க முன்வராதன்றோ? அங்கபூதமான காலத்தை எதிர்பார்த்து அதற்காக பிரதானத்தை அநுஷ்டியாமலிருப்பதும் யுக்தமாகாது. ஆகையால்தான் [illegible] களில் அ[illegible]அனுஷ்டான விஷய[illegible] சாஸ்திர[illegible] நித்யங்களை விதிக்கின்றன. நித்யங்களில் யதாசக்தி ஆசரணத்தையும் மீமாம்ஸகர்கள். நியாயத்தினால் உத்பத்தி செய்கிறார்கள். ஆனால் முக்யகாலம் ஸம்பவிக்கும்போது, இதர அங்கங்களை அனுஷ்டிக்க ஸௌகர்யமில்லாதபோது அந்த இதரஅங்கங்களைவிட்டுவிட்டாவது முக்யகாலத்தையே அநுஸரிக்க வேண்டியது நியாயமாகும்.

எப்படியும், முக்யகாலம் ஸம்பவிக்காத ஸமயத்தில் அந்த முக்யகால பிரதிநிதியாக கௌண காலமே அநுஸரிக்கத் தக்கதென்ற விசேஷமானது கீழ்காட்டப்படும் மண்டனமிச்ராதி வாக்யங்களால் மதன பாரிஜாதத்தில் சொல்லப்பட்டிருப்பது கவனிப்பட வேண்டும். அதாவது:—

मुख्यकाले यदावश्यं कर्म कर्तुं न शक्यते ।
गौणकालेऽपिकर्तव्यं
गौणोऽप्यत्रेदृशो भवेत् । मुख्यकालेहि मुख्यंचेत् साधनं नैवलभ्यते । तत्काल द्रव्ययोः कस्यमुख्यत्वं गौणतापिवा । मुख्यकाल मुपाश्रित्य गौणमप्यस्तु साधनं । न मुख्य द्रव्य लोभेन गौण काल प्रतीक्षणं ॥

(மதன பாரிஜாதம்–183–185) ஆகையால் ஸ்வக்ருஹ்யோக்தமான முக்ய காலம் ஸம்பவிக்காமல் போனால் ஸ்மிருதிகளில் சொல்லப்பட்ட காலமும் கௌணமாக கிரஹிக்கத்தக்கதென்று நன்கு சொல்லப்பட்டது, அதிலும் அதிகஸ்மிருதிகளில் விதிக்கப்பட்டதை அநுஸரிப்பதும் அதிகஸ்மிருதிகளால் நிஷேதிக்கப்பட்டதை வர்ஜிப்பதுமென்கிற தாரதம்யமும் மெஜாரிடி நியாயத்தால் அறியத்தக்கது.

(தொடரும்)

வாலிபர்களின் கடமை

(A. V. சௌரிராஜன், சிதம்பரம்.)

பாரத தேசத்தில் மதத்திற்காகவும், பண்டை கால ஒழுக்கங்கள் மறையாது இருக்கவும் வாலிபர்கள் செய்யவேண்டிய கடமைகள் அதிகம் உள்ளன. நாம் நமது ஏழ்மையினாலும் நாகரீகப்பேயின் பீடையாலும் ஒழுக்க வழக்கங்களைதள்ளி பிறர் பரிஹஸிக்கும் நிலைமையை அடைந்து விட்டோம். மற்ற மதஸ்தர்கள் தங்கள் மத தெய்வங்களுக்காக ஒவ்வொரு நாளிலும் சிறிது நேரம் தொண்டும், அதை அழியாது ஸ்தாபிக்க பணங்களை சேர்க்க இன்னும் முயலுகின்றனர். நம் மதத்தில் முன்னோர்கள் தெய்வங்களுக்காக சிரமத்தை பாராமல் அனேக தொண்டுகள் இயற்றியுள்ளனர். நமது பண்டை கால அரசர்கள் தர்ம ரூபமான கீர்த்திகளை முன்னிட்டு தமது ராஜ்ய நாசத்தை பொருட்படுத்தாமல் கோயில்களையும் அதற்கேற்றவாறு ஏராளமான தனங்களையும் ஸ்தாபித்து சாசுவதமான நிலைமை அடைந்திருக்கிறார்களென்பது யாவரும் அறிந்ததே ஆனால் பண்டைகால ராஜாக்கள் தமது ஆலயங்கள் பொது ஜனங்களால் பஹிஷ்கரிக்க வேண்டிய காரணங்களை நேரில் கண்டால் அவர்கள் மனம் என்ன நிலை அடையும் என்பதை சற்று ஊன்றிப் பார்ப்போம். அந்தோ! நமது சென்னை மாகாண கவர்னர் அவர்கள் சில தினங்களுக்கு முன்பு இவ்வாறு பேசியுள்ளார்கள். "இப்பொழுது நடக்கும் மஹா யுத்தத்தில் எதிராளிகள் வெற்றி பெற்றால் கிருஸ்து மதமும் நமது மாதா கோயில்களும் என்னிலையடையு" மென்று. நமது கவர்னர் அவர்களுக்கு தன் மதத்தில் எவ்வளவு அளவுகடந்த பிரேமை என்பது வெளியாகிறது.

நமக்கு பிறர் மதத்தில் வெறுப்பு கிடையாது. அந்தந்த ம[illegible]மானிகள் தங்கள் மதங்களில் பற்றுதல் உள்ளவர்களாக இருக்க வேண்டு மென்பதே நமது கோரிக்கை. நமக்கு மதக்கல்வி இல்லாததும், ஜீவனோபாயத்திற்கும் நமது மதத்திற்கும் சம்பந்தமில்லாமல் இருப்பதும் மத முன்னேற்றத்திற்கு தடையாக உள்ளது. நமது மதத்தை தெளிவுபடுத்தக்கூடிய புஸ்தகங்கள் தமிழ் மொழியிலும் வடமொழியிலும் ஏராளமாயுள்ளன. இப்புஸ்தகங்களை போதிக்கக்கூடிய ஆசிரியர்களைக் கொண்டு மதுரைமா நகரிலுள்ள சனாதனதர்ம வித்யாலயங்களைப்போல் ஆங்காங்கு நிறுவ வாலிபர்கள் தீவ்ரமாக முயலவேண்டும். நமது தாய்மார்களுக்கோ, குழந்தைகளுக்கோ சரீர அஸௌக்யம் ஏற்பட்டால் கால் நடையாகவாவது சென்று தகுந்த வைத்தியரைக் கொண்டு எப்படி சரீர சௌக்கியத்தை உண்டு பண்ணுகிறோமோ அது போல் நம் மதத்திற்குக்லானி ஏற்பட்டால் நமது சரீரத்திற்கு ஏற்பட்டதற்கு சமானம் என்றமனப்பான்மையுடன் பிரசாரம் செய்யவேண்டும்.

பெரிய பிரசாரகர்களை கொண்டு தான் பிரசாரம் நடத்த வேண்டுமென்பது தற்காலம் சிரமத்தை கொடுக்ககூடியதே. வாலிபர்கள் தங்கள் ஊர்களுக்கு சமீபத்திற்கு கால்நடையாகவாவது சென்று நமக்கு தெரிந்த மததத்வங்களையும் பெரியோர்களிடம் கேட்ட உபன்யாஸ விஷயங்களையும் பிரசாரம் செய்தால் நமது மதம் முன்னேற்றமடைவது திண்ணம். பிரசார விஷயத்தில் பண்டை காலமுறைகளையும் தற்காலம் இருக்கும் நிலைமையும் விமர்சன தோரணையில் பொது ஜனங்களுக்கு எடுத்துரைக்க வேண்டும். கூடிய வரையில் மதத்தொண்டு செய்யவேண்டும் என்ற எண்ணம் உண்டாகும்படி பொது

(தொடர்ச்சி 7-ம் பக்கம் பார்க்க.)

இந்திய தேசிய விஷயங்கள்

(இந்தியன் திங்கர்)

தேசிய விஷயங்களில் எல்லா ஜனங்களுமே ஒற்றுமைக்க வேண்டுமாயின் ஓர் திட்டத்தை வகுத்துக் கொள்ள வேண்டியது இன்றியமையாதது. நமது பிரார்த்தனைகளுக்கு இணங்கி பிரிடிஷார் நமக்கு ஸ்வயராஜ்யத்தை கொடுத்து விட்டு விலகிக்கொள்வார்கள் என்ற நம்பிக்கை நம்மிடம் வெகு சிலர்க்கும் இனி இல்லை. மஹாத்மா காந்தி அவர்கள் இந்திய காங்கிரஸில் கலந்து கொண்டது முதலாகவே மனப்பான்மையில் ஓர் மாறுபாடு ஏற்பட்டு விட்டது. பிறர் நமக்கு அளிக்கும் தானமல்லஸ்வய ராஜ்யம். நாம் பாடுபட்டு தேர்ச்சி அடைந்து ஒற்று வாழும் திறமையைப்பொறுத்தது அது என்று உணர்ந்து கொண்டோம். அதற்கு ஏற்ற நிர்மாண திட்டத்தையும் ஒருவாறு ஏற்படுத்திக் கொண்டோம். காந்திஜியின் ஒற்றுமையாமை இயக்கமும் மேற்படி நிர்மாண திட்டத்தின் ஓர் பகுதியே யன்றி வீணாக நம்மையோ பிறரையோ வாட்டி துன்புறுத்தி ஹிம்ஸிக்கத் துடங்கிய இயக்கம் அல்ல. ஆகையால் ஷடி நிர்மாண திட்ட விஷயமாக காந்திஜியின் மனப்பான்மை என்ன, முறை என்ன, நோக்கம் என்ன என்று நாம் ஆராய முயல வேண்டியது அவச்யமே.

காந்திஜியின் தேசியம் ஏகாதிபத்தியத்தை சார்ந்ததன்று பிறதேசத்தின் அமைதியை குலைத்து, பெருக விரும்பும் தேசீயமல்ல. எளியவர்களின் அன்பனான காந்திஜி உலகத்தில் எல்லோருமே அமைதியுடன் வாழ வேண்டு மென்று ஆரம்பித்த யெக்கமே இது. ஒருவருக்கு ஒருவர் போட்டி, ஓர் வகுப்பு மற்றொரு வகுப்போடு போட்டி, ஓர் தேசம் மற்றொரு தேசத்தோடு போட்டி போட்டு இதரரை நசுக்கி தான் விருத்தி அடைவது என்ற மேல் தேசங்கள் கொண்டிருக்கும் நோக்கத்தை ஒழித்து எல்லோருமே ஸௌக்யமாக ஒன்றுபட்டு வாழக் கூடிய வழியை, நீண்டகால நாகரீகம் படைத்த இந்தியா அறிவிக்கும் முறையை உலகத்திற்கு போதிக்க முற்பட்டவர் காந்தி.

இந்தியாவில் ஆங்கில ஆதிக்யம் ஏற்பட்டு பற்பல துறைகளில் பெருகிவருகிறது. ஆயினும் இந்தியாவின் குறையை பூர்த்தி செய்யவோ தங்கள் குறையை இந்திய நாகரீகத்தின் தத்வங்களைக் கொண்டு நிரப்பிக்கொள்ளவோ மேல்தேசத்தவர் முயன்றதில்லை. இந்திய பாஷைகளுக்கு பதிலாக ஆங்கில பாஷை, இந்தியமத உணர்ச்சிக்கு பதிலாக ஆங்கிலமத உணர்ச்சி, இந்திய அரசியல் முறைக்கு பதிலாக ஆங்கில அரசியல் முறை இதுதான் ஏற்பட்டு முற்றி வருகிறது. இந்தியாவே மேற்தேசமாக மாற வேண்டியதுதான் பாக்கி! இதுதான் குடி ஏற்றம்? நாமே சற்று கவனித்துப் பார்த்துக்கொள்வோம். உண்ணும் உணவு மட்டில்தான் நம் தேசத்தியது மற்ற நம் தேவையாவுமே பிற தேசத்தினர் நமக்கு அளிக்கும் பொருள்காண அவைகளை உற்பத்திசெய்ய சக்தி இல்லை. அவைகள் இன்றி வாழ தைர்யமில்லை. நமது புத்தியும் நமது சித்தமும் பிறருக்கு அடிமை. நமது தேசத்தையும் பிறருக்கு அடிமையாக்கி இரண்டு காசு ஸம்பாதித்து அதையும் அன்ய தேசத்திய தொழிற்சாலைகளுக்கு அனுப்பிக்கொண்டு வருகிறோம். கூலிவேலை செய்ய மட்டில்தான் நமக்கு யோக்யதை அந்ய தேசத்தினரை குறைகூறுவதில் யாது பயன்? நாம் நம்மை இந்த நிலமைக்கு கொண்டுவந்தோம். மேலே கிளம்பவேண்டுமென்ற எண்ணமும் அற்றுவிட்டது. இந்த நிலையில் அன்யதேசம் இஷ்டப்பட்டாலும் நமக்கு உதவி அளிக்க முடியாது. பிறர் நாகரீகத்துக்கும் மதத்திற்கும் பாஷைக்கும் அடிமைப்பட்டுவாழ ஆக்ரஹப்படும் நமக்கு நாமே சத்ரு. ஆகையால் இந்த மனப்பான்மை மாறிவரும் வரையில் ஓர் விதமான முன்னேற்றமும் ஏற்பட முடியாது.

அதற்கு முக்யவழி அரசியல் அதிகாரத்தை நாமே கைப்பற்றிக்கொள்வதுதான் என்று காந்திஜீ கண்டு கொண்டார். அரசியில் அதிகாரத்தைக் கொண்டு ஜனங்களுக்கு அவர்கள் ஹிதத்தை அறிவித்து அதற்காக பிரயத்னப்பட வேண்டுமே அல்லது வாய் உபதேசங்கள் பலனை அளிக்காது என்று கண்டுதான் காந்திஜீ அன்ய ஸர்காருடன் ஒத்துழயாமையைக் கொண்டார். அந்ய தேசங்களுடன் வியாபாரத்தை முக்யமாக துணி இறக்குமதியை நிறுத்த முயன்றார். இந்தியர்களே ஸர்காருடன் ஒத்துழைக்காவிடில் மேறு மனுதர்களை வரவழைத்துக் கொண்டு நிர்வாகத்தை நடத்த முடியாதல்லவா! நிர்வாஹத்தை நம்மிடமே ஒப்புவித்து விட்டு வெளியேறவே வேண்டும். பிறகு நாமே நம் தேவைகளை பூர்த்தி செய்து கொண்டு அன்யநாடுகளுடன் ஸ்னேஹபாவமாக வாழலாம்.

ஆகவே ஸ்வயராஜ்யத்துக்கு ஆதாரமாகவே ஒற்றுமையாமையை ஆரம்பித்தார். அதாவது ஸர்க்கார் உத்யோகங்களுடன் ஒத்துழையாமை 2 அவர்கள் நீதிஸ்தலங்களுடன் ஒத்துழையாமை 3 அவர்கள் [illegible] அவர்களின் முக்ய வருமான கலால், உற்பத்தி வியாபார உபயோகங்களுடன் ஒத்துழையாமை. 5 விதேசிய வஸ்திரங்களை பஹிஷ்கரித்து நாம் நூற்று தயாரிக்கும் நாட்டு உடைகளை ஆதரித்தல் 6 குடிகளிடமிருந்து ஸர்க்கார் வரிவசூல் செய்யும் பாத்யதையை மறுத்து ஆக்ஷேபித்தல் 7 ஸர்க்காரால் செய்யப்பட்டவைகளில் அந்நியாயம் என்று தோன்றும் சட்டங்களையும் விதிகளையும் மீறி நடந்து அவர்கள் விதிக்கும் தண்டனையை மனப்பூர்வமாக ஆக்ஷேபணையின்றி ஏற்றுக் கொள்ளுதல் ஸத்யத்தில் ஆக்ரஹம்கொண்டு அஹிம்ஸா முறையில் ஸஹித்துக் கொள்ளுதல் (8) தேசத்தை ஒற்றுமைப் படுத்துவது ஹிந்து முஸ்லீம்கள் பார்ஸி, கிருஸ்துவர்களை ஒன்றுபடச் செய்வது, தீண்டாமையை அகற்றி தீண்டாதவர்களையும் நம்முடன் சேர்த்துக் கொள்வது என்பதாகும் இப்படியாக அந்ய தேசத்தாருக்கு நாம் செய்யும் உதவியை நிறுத்திவிட்டால் அந்ய தேசத்தவர்கள் ஒன்றும் செய்யமுடியாமல் திகைத்து நிற்க நேரிடும்.

ஒத்துழயாமையை மேல் தேசத்தவரும் கையாளுவதுண்டு. ஆயினும் அஹிம்ஸா முறையில் அதை அமைத்தது காந்தியே. கத்தி இல்லாததால் அல்ல, பலாத்காரம் என்பது நமது தர்மத்துக்கு விரோதம் என்பதால்தான். எல்லா தேசங்களுமே ஒத்துழைக்க வேண்டுமென்று எதிர்பார்க்கும் காந்திஜீ வேறு ஒரு தேசத்தை பலாத்கார முறையில் துன்புறுத்த நினைக்கமாட்டாரல்லவா? அது பாபமாகவே கருதப்படும்.

மேல் தேசங்கள் இதைப் புரிந்துகொள்ளவே முடியாமல் போகலாம். தன்தேசம், பிறர் தேசத்தை வென்று அடிமை கொள்ள வேண்டுமென்ற மனப்பான்மை உடையவர்கள் இதை எப்படி அறிந்து கொள்ள முடியும்? आत्मैव ह्यात्मनो बन्धुः आत्मैव रिपुरात्मनः என்பவர்களின் மனோதர்மத்தை அறிந்து கொள்வது ஸுலபமல்ல. ஆயினும் நாம் ஒத்துழையாவிடினும் பலாத்காரத்தைக் கைகொள்ளமாட்டோம். அவர்கள் செய்கைகளில் நமக்கு வருத்தம் ஏற்படினும் அதிக்ரமித்து அவர்களைத் தாக்க முற்படமாட்டோம் என்பதை உடனே உணர்ந்து கொள்ள முடியவில்லை. ஆகையால் மேல் தேசத்தவர்கள் காந்திஜியை நம்பவில்லை. அவர் இதை ஓர் தந்திரமாகவே அனுஷ்டிக்கிறார், கூடியசீக்ரம் பலாத்காரத்தையே கைக்கொள்வார் என்றே கருதினார்கள். அதற்கேற்க பம்பாய் கலகம் ஏற்பட்டவுடன் மேல் தேசத்தியவர்கள் நிச்சயமாக பலாத்காரமின்றியே ஒத்துழயாமை இருக்கவே முடியாது என்று ஸித்தாந்தம் செய்து கொண்டு விட்டனர். இல்லாவிடில் முஸல்மான்களை ஏன் தன்னுடன் சேர்த்துக் கொள்ள வேண்டும் காந்திஜி என்றனர். நம்மவரே சிலர் இப்படி ஸந்தேகித்தனர் பிறகு காந்திஜியே தெரிவித்ததுபோல் நம்மவரிலே அனேகர் அவர் கொள்கைகளை ஸரியாகப் புரிந்துகொள்ள மறுத்தும் விட்டனர். (தொடரும்.)

முத்ராதிகாரி பிரசாரம்

கும்பகோணம்

பிரதி ஏகாதசியிலும், ஸ்ரீ ஆதிபகவத் பாதாள் சரித்திரமாகிய 'ஸ்ரீசங்கர விஜயம்' உபன்யாசத்தை, மாலை 6½ மணியிலிருந்து 8 மணி வரையில் [illegible] ஸ்ரீகாஞ்சி [illegible] களின் [illegible] டபீர் கிழப்படித்துறையில் ஷடி அக்ரஹார முத்திராதிகாரி, கோவிந்தபுரம், வேதாந்த சிரோமணி பிரும்மஸ்ரீ எஸ். வாஸுதேவ சாஸ்திரிகள் அவர்களால், பிரவசனம் நடைபெற்றது. மஹாஜனங்கள் வந்திருந்து, கதா ச்ரவணம் செய்தார்கள். அன்று, 16-6-40 தேதி கட்டத்தில், ஸ்ரீ ஆதிபகவத் பாதாள் குருவைத் தேடிச் சென்று, கோவிந்த பகவத் பாதாளை அடைந்து, உபதேசம் பெற்ற விஷயம் விஸ்தாரமாய் சொல்லப்பட்டது.

பிரதி அஷ்டமியிலும் ஸ்ரீமுக ஆக்ஞைப்படி, பசுநெய்க்குச் சொல்லப் படுகிறது. ஸ்ரீமுக ஆக்ஞைகள் ஐந்தும், சரியான சமயத்திலேயே, ஸ்ரீ ஜனங்களுக்கு படித்துக் காட்டப்பட்டது.

எஸ். ராஜாமணி சாஸ்திரி

மிகச்சிக்கனம் பூர்ணகுணம்

'ஆத்ரேய'

குடும்ப ஔஷதப் பெட்டி,

ஸாதாரணமாக ஏற்படும் எல்லா வியாதிகளுக்கும் ஒரு சிறந்த வைத்தியருடைய உதவியைச் செய்கிறது.

ஒவ்வொரு குடும்பத்திற்கும், பிரயாணம் செய்வோருக்கும் அத்யாவசியமானது.

ஒரு பெட்டி விலை ரூ 5—0—0

'ஆத்ரேய'

ஆயுர் வேதிக் ஒர்க்ஸ்,

தென்னூர் ரோடு, திருச்சிராப்பள்ளி

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
விக்ரம-ஸு ஆனி-மீ 7௨

இந்திய ராஜீய நிலைமை

இந்தியாவின் ராஜீய நிலைமையானது மிகவும் குழப்பத்திலிருக்கிறது. எதிர்காலத்தில் இது எப்படி முடியுமென்று ஹேஷ்யமாகக் கூட ஒருவரும் சொல்லமுடியாத நிலைமையிலிருக்கிறது. ஆயினும் யுத்த நெருக்கடி காரணமாக பிரிட்டன் உடனே எவ்வித நடவடிக்கையும் எடுக்கக்கூடிய நிலைமையில் இல்லை. இருந்தாலும் இந்தியா மந் [illegible] கிறார் [illegible] பூர்வ [illegible] கள். கா[illegible]ஸ, முஸ்லிம்லீக் போன்ற ராஜீயக்கக்ஷிகளும் தங்களது பிகுவைத் தளர்த்திக் கொடுக்காமலே பேசி வருகின்றன.

சில தினங்களுக்கு முன் புதிய இந்தியா மந்திரி கர்னல் அமெரி இந்திய விஷயத்தைப் பற்றி ரேடியோவில் பேசுகையில், இந்தியாவிற்கு குடியேற்ற நாட்டு அந்தஸ்து கொடுத்துவிடத் தயாராக இருப்பதாககூறியதுடன், இந்தியாவில் ஜாதி, மதம், சரித்திரம் காரணமாக வகுப்பு வித்யாஸம் அதிகமிருப்பதாயும், இந்திய ராஜீய நிலைமை சாந்தமடையாததற்கு அதுவே முக்ய காரணமென்றும் குறிப்பிட்டார்.

காங்கிரஸ் தலைவர்களில் சிலர் மீண்டும் மந்திரி பதவி ஏற்கப்போவதில்லையென்று பேசி வந்தாலும், எப்படியாவது மறுபடி ஆக்ஷிசெலுத்த ஆசைகொண்டு திரை மறைவில் சில தலைவர்கள் வேலைசெய்து வருவதை மறைக்க முடியாது. அதற்காக அவர்கள் முஸ்லீம்லீகுக்கு இணங்கிப்போகும் மனோபாவத்தைக் காட்டிக்கொண்டும் வருகிறார்கள். ஜாதி-மத பேதங் காரணமாகவே இந்திய ராஜீய நிலைமை நேர் படவில்லையென்பது முஸ்லீம்லீகின் எதிர்ப்பையே முக்யமாகக் குறிப்பிடுவதாக நினைத்து காங்கிரஸ்காரர்கள் லீகை ஸரிப்படுத்த வழி தேடி வருகிறார்கள்.

ஸமீபத்தில் காங்கிரஸ் தலைவர் மௌலானா ஆஸாத், ஸர். ஹயாத்கானையும், பஸ்லுல் ஹக்கையும் கண்டுபேசியகாரணம் என்ன? மேலும் ஜனநாயக தத்வத்தில் ஊறியவர்களாகப் பெருமை பேசிவரும் காங்கிரஸ்வாதிகள் இப்போது மெஜாரிடிக்கக்ஷி நிர்வாஹத்திற்குப் பதிலாக எல்லாக்கக்ஷிப் பிரதிநிதிகளும் கொண்ட மந்திரி ஸபையை அமைக்க இணக்கம் காட்டிவருவதின் கருத்து என்ன? பிரபல ராஜீய எதிரிகளான முஸ்லீம்களை ஸரிப்படுத்தும் நோக்கமல்லவா இது? ஆகவே லீகை ஸரிப்படுத்திக்கொண்டு மீண்டும் காங்கிரஸ் ஆக்ஷியை உயர்பித்துத் திருவிளையாடல் நடத்தலாமென்ற உத்தேசமிருப்பதாகவே தற்போதிய ஸம்பவங்களால் ஊஹிக்கக்கூடியதாயிருக்கிறது. கவர்மெண்டார் முஸ்லீம் லீகும் காங்கிரஸும் ஒற்றுமைப்பட வேண்டுமென்கிறதற்கே பாடுபட்டு வருவதாகவும் தெரிகிறது.

இந்தியாவில் காங்கிரஸையோ, லீகையோ நம்பாதவர்களானகோடிக்கணக்கான பிரஜைகள் எல்லா வகுப்பிலும் இருந்து வருகிறார்கள். அவர்களுடைய விருப்பத்தையும், உரிமைகளையும், கவர்ன்மெண்டார் தக்க வழியில் மதிக்காமல், காங்கிரஸையும் லீகையும் ஸரிப்படுத்திவிட்டால் போதுமென்று நினைப்பார்களானால் அதைவிட அசட்டுத்தனமான கார்யம் வேறில்லை. ஹிந்துமஹா ஸபையோ, மற்றசிறுபான்மை வகுப்புக்கக்ஷிகளோ மௌனமாக இருந்துவிடுமென்று நினைத்துவிடக்கூடாது.

மீண்டும் மாகாணஸ்வய ஆக்ஷி முறையை கவர்ன்மெண்டார் உயிர்பிக்கவிரும்புகையில் அதில் முக்கியமாகச் சில பந்தோபஸ்து முறைகளைச் செய்தேயாகவேண்டும்.

முக்யமாக ஜனநாயக முறைப்படி மெஜாரிடி கக்ஷியிலிருந்து மட்டும் மந்திரிகளைப் பொறுக்குவதென்பது இனி கூடாது. அதில் உள்ள அனர்த்தங்களை அனுபவத்தில் கண்டு விட்டோம். எலெக்ஷனில் மெஜாரிடி ஓட்டுக்கிடைத்துவிட்ட ஒரு காரணத்தாலேயே ஸ்ரீமான் ராஜகோபாலாசாரியார் துணிவு கரமான பல தீங்குகளைச் செய்ய முடிந்தது. காரணம் கேட்டால், "எனக்கு மெஜாரிடி ஆக்ஞை [illegible] வந்தார். இந்த ஒரு காரணத்தா[illegible] இனி மெஜாரிடி கக்ஷியாக்ஷியை எதிர்க்க வேண்டியதாகி விட்டது.

மேலும் ஜனநாயக முறையானது யோக்யப் பொறுப்பில்லாதவர்களையும், அர்ஹதையற்றவர்களையும், சுயநலக்காரர்களையும் படிப்பு வாஸனையற்றவர்களையும் கூட அதிகாரப்பதவியில் ஏற்றிவைக்கும் தன்மை வாய்ந்ததாயிருக்கிறது. ஒரு கார்யத்தைச் செய்ய அதிகாரமற்றவனை அக்கார்யத்தில் சம்பந்தப் படுத்துகிறது. இதனால் ஏற்பட்ட ஸஹிக்கமுடியாத கஷ்டங்களைக் காங்கிரஸ் ஆக்ஷிகாலத்தில், முனிஸிபாலிடி ஜில்லா போர்ட், சட்டஸபை மந்திரிபதவி முதலிய விடங்களில் பூர்ணமாகப் பொது ஜனங்கள் அனுபவிக்க நேர்ந்தது. ஆதலால் சென்ற $2\frac{1}{2}$ வருஷ ஆக்ஷியில் நேரிட்ட விபரீதங்கள் மீண்டும் ஏற்படும் வண்ணம் மாகாண ஆட்சியை உயிர்ப்பிப்பது நிலையான ஸமாதானத்தை தேசத்தில் உண்டாக்காதென்பது நிச்சயம். எல்லாராஜீயக் கக்ஷிகளும், கவர்ன்மெண்டாரும் இதை உணர்ந்து தீர்க்கதிருஷ்டியுடனும் ராஜதந்திரத்தினுடனும், பிரஜைகளின் உரிமைக்குப் பங்கம் ஏற்படாதவழியிலும் பொறுப்புடன் கார்யம் நடக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டியது அவச்யமாகும்.

முத்ராதிகாரிகளுக்கு வேண்டுகோள்

"ஆர்யதர்மம்" பத்திரிகையை ஆதரிக்கவேணும்.

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஸ்ரீஸ்வாமிகள் ஆங்காங்கு முத்ராதிகாரிகளை நியமனம் செய்து வருவதையாவரும் அறிந்ததே. இந்த நியமனத்தால் ஸ்ரீ மடம் கார்யங்கள் சிஷ்யர்களின் கவனத்திற்கு அடிக்கடி கொண்டு வரப்படுவதுடன், நமக்குள் கட்டுப்பாடுகளும் ஒற்றுமையும் அதிகரிப்பது பெரிய ஸௌகரியமாகும் இதில் ஒரு முக்கிய விஷயம் கவனிக்கத்தக்கது முத்ராதிகாரி நியமனத்தால் ஸ்ரீ மடம் கார்யங்கள் கவனிக்கப்படுவதாகத் தோன்றினாலும் அதில் ஸனாதனதர்மபிரசாரமே அதன் உயிர் ஸ்தானமாக வைக்கப்பட்டிருப்பது விசேஷமாகும். வேத, வைதீக ஆதரவு, உபநயனாதி ஸம்ஸ்காரங்களை ஒழுங்காக நடத்தல், ஒரு நாள் விவாஹத்தை நிறுத்துவது, ஆலய ஸம்ரக்ஷணம், பசு ஸம்ரக்ஷணம் போன்ற பொது தர்ம விஷயங்கள் முத்ராதிகாரி பிரசாரத்தில் முக்யவிஷயமாக வைக்கப்பட்டிருக்கிறது.

இப்போது அநேகமாக தஞ்சை ஜில்லாவில் பலவிடங்களில் முத்ராதிகாரிகள் நியமிக்கப்பட்டு விட்டார்கள். மற்றவிடங்களிலும் வெளி ஜில்லாக்களிலும் சீக்கிரம் நியமிக்கப்படுவார்கள்.

முத்ராதிகாரிகள் தாங்கள் செய்யவேண்டிய பிரசாரவேலைகளையும், செய்த வேலைகளையும் யாவரும் அறியும் வண்ணம் பத்திரிகைகளில் வெளிப்படுத்த வேண்டியது அவச்யம். அப்படிச்செய்தால் முத்ராதிகாரிகளுக்குள்ளேயே ஐகமத்யத்துடன் எங்கும் ஒரேமாதிரியான பிரசாரமும் கட்டுப்பாடாக நடத்திப் பலன் அடையமுடியும்.

ஸமீபகாலமாக முத்ராதிகாரிகள் செய்து வரும் பிரசாரங்களும், ஜனங்களின் சிரத்தையும் "ஆர்யதர்மம் பத்திரிகை மூலம் வெளியாகி வருவதைப் பார்க்கிறோம். ஸ்ரீ சங்கர ஜயந்தி காலத்தில் நடந்த கொண்டாட்டங்களும் ஆர்யதர்மத்தில் வந்தது போல் வேறு எந்த பத்திரிகையிலும் வரவில்லை. முத்ராதிகாரிக[illegible] வேலைகளைப் பொது ஜனங்கள் அறிந்ததுடன் அவர்கள் கட்டுப்பாடாக கார்யம் நடத்தியதையும் ஆர்யதர்மம் மூலமாகவே அறிய முடிந்தது.

முத்ராதிகாரிகளுக்குத் தனியாகப் பத்திரிகை வேண்டியதில்லை. ஜகத்குரு ஸ்ரீ ஸ்வாமிகளின் ஆக்ஞையால் ஆரம்பிக்கப்பட்டு அவாளுடைய அநுக்ரஹ பலத்தினால்நடந்து வரும் "ஆர்யதர்மம்" பத்திரிகையை முத்ராதிகாரிகள் தங்களுடைய பிரசார பத்திரிகையாக எடுத்துக் கொள்ளவேணும். ஆர்யதர்மத்தில் முத்ராதிகாரி பிரசாரத்திற்கு என்றே சில பத்திகளை ஒதுக்கி வைத்து அவைகளில் முத்ராதிகாரி பிரசார விவரம் ஒவ்வொரு வாரமும் வெளி வரும்படி செய்யவேண்டியது அவசியம்.

ஆகையால் அங்காங்குள்ள முத்ராதிகாரிகள் அந்தந்த விடங்களிலுள்ள ஜன ஸமூஹ அபிப்ராயத்தையனுஸரித்து ஆர்யதர்மத்திற்கு சந்தாதார்களாகச் சேரவேணும். அந்தபத்திரிகையை கிராமத்தார்கள் படித்துப்பயன் பெறுமாறு செய்வது அவச்யமாகிறது. முத்ராதிகாரிகளுக்கென்றே ஆர்யதர்ம சந்தாவைச் சிறிது குறைத்துக் கொடுக்க அப்பத்திரிகை நிர்வாஹிகள் ஏற்பாடு செய்வதும் விரும்பத்தக்கது. ஆகையால் முத்ராதிகாரிகள் யாவரும் ஒவ்வொரு பிரிவிர்க்கும் ஒரு ஆர்யதர்மம் பிரதியையாவது இனி கட்டாயமாக வரவழிக்க உடனே ஏற்பாடுசெய்து கொள்ளவேணும். இப்படிச்செய்தால் பொது ஜனங்களுக்கும், முத்ராதிகாரிகளுக்கும் மிகுந்த ஸௌகர்யம் ஏற்படுமென்று நினைக்கிறோம். சந்தா தொகையை பொதுவிலிருந்தே கொடுக்கலாம்.

ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகளின் ஆலோசனையைக் கேட்டும், தாங்களுகா

கவும் ஒரு முடிவுசெய்து எங்கும் ஆர்ய தர்மத்தை தருவிக்க ஏற்பாடு செய்வார்களென்று நம்புகிறோம். இது விஷயமாக வேறுபலரும் தங்கள் அபிப்பிராயத்தை வெளியிட வேண்டுகிறோம். ஸ்ரீ ஸ்வாமிகளும் முத்ராதிகாரிகளுக்கு இந்த நியமனத்தைச் செய்ய பிராத்திக்கிறோம்.

முத்ராதிகாரி பிரசாரம்

குடந்தையில் ஸ்ரீ. டி எல் ஸுப்பய்யர் பிரஸங்கம்

குடந்தை, சோலையப்ப முதலித்தெரு முத்ராதிகாரி ஸ்ரீமான் ஸுப்பிரமண்ய அய்யரால் பிரதி ஏகாதசியிலும் நடத்தப்பட்டு வரும் தர்ம பிரசாரமானது 3உ ஞாயிற்றுக்கிழமை ஏகாதசியன்று அந்ததெரு தேவாலயத்தில் விசேஷமாக நடைபெற்றது

மஹாமஹோபாத்யாய ஸ்ரீ கிருஷ்ணமாசாரியர் பிரம்மஸ்ரீ வேம்பு சாஸ்திரிகள், வேதாந்த சிரோமணி ரகுநாதசாஸ்திரிகள் நாராயண சாஸ்திரிகள் ஸ்ரீ கோபால தேசிகாசாரியார் முதலிய வித்வான்களும் அந்த தெரு வைதிக, லௌகிக பிரமுகர்களும் அநேக ஸதிரீகளும் கூடியிருந்தனர்.

திருக்கருகாவூர் பிரம்மஸ்ரீ ஸுப்பய்யர் அவர்கள், பிரா்ம்மண்யம், காயத்ரீமஹிமை போன்ற அனேக முக்யவிஷயங்களைபபற்றி மந்வாதி ஸ்மிருதி களுடையவும், ஸ்ரீ தாயுமானவர் முதலிய பெரியோர் பாடல்களுடையவும், உதவியைக் கொண்டு வெகு கம்பீரமாயும், உருக்கமாயும், கேட்போர் மனதில் பசுமரத்தாணிபோல் பதியும் படியும் பிரஸங்கித்தார்கள்.

இப்போதிய யுத்தத்தில் வெற்றியேற்படுவதற்காக எங்கும் நியமபூர்வமாக காயத்ரீ [illegible] அநுஷ்டிக்குமபடி செய்தால ஜயம நிச்சயமேற்படுமென்றும் கூறினர்.

ஸ்ரீமான்கள் ரகுநாத சாஸ்திரிகள், அய்யாத்துரை அய்யர் ஆகியவர்காளல் ஸ்ரீ ஸுப்பய்யரின் பிரஸங்கதைப் புகழ்ந்து நன்றி கூறப்பட்டது.

ஸ்ரீ கிருஷ்ணமாசாரியஸ்வாமிகளால் ஸ்ரீ அய்யருக்கு மாலையிடப்பட்டது.

இரவு 9 மணிக்கு ஸபை பூர்த்தியாகியது.

(ந. கி.)

நீடாமங்கலம்

ஸீதா கல்யாண உபந்யாஸம்

நீடாமங்கலம் ஸ்ரீ ஸந்தானராமஸ்வாமி ஸந்நிதி அழகிய கலியாண மண்டபத்தில் நாச்சியார் கோயில் லக்ஷ்மீ மந்திரம் ஸ்ரீ உபய வேதாந்த ஆசார்ய ஸிம்ஹாஸநாதிபதி வித்வான் அபிநவஸரஸ்வதி வாங்முகரத்ன கோச, வித்வத் சிரோமணி பண்டிதராஜ: குருவர்ய ஸ்ரீ நடாதூர் கிருஷ்ணமாசார்யார் ஸ்வாமிகள் "ஸீதா கல்யாணம்" என்ற விஷயத்தைப்பற்றி விசேஷார்த்தங்கள் வேத வேதாந்த விஷயங்கள் ஸநாதநதர்மங்களுக்கு முக்யமாயுள்ள கந்யா விவாஹம் ஸ்ரீபகவதாலயவைபம் இவைகளை பலவித சாஸ்திரப்பிரமாணங்களுடன் ஆஸ்திக மஹாஜனங்கள் உத்தம புருஷ ஸ்திரீகள் கேட்டானந்திக்குமாறு உபந்நியாஸித்தார்கள். பலசுவை பொருந்திய சொற்பொழிவைக் கொண்டாடி ஸந்நிதி அர்ச்சகர் நடாதூர் ஸ்வாமிகளுக்கு புஷ்பமாலை சூட்டி வந்தனோபசாரம் கூறினதும் ஸபை இனிது பூர்த்தி பேற்றது.

(ஒ. கி.)

ஸ்ரீ கீதோபன்யாஸ பூர்த்தி

விழுப்புரம் தைவநெறிக் கழகத்தினுதரவில் தலைவர் ஸ்ரீமான் வெங்கட்ரமண அய்யரவர்கள் பி. ஏ. ஸ்ரீ வத்ஸ ஸோமதேவசர்மாவைக் கொண்டு ஸ்ரீ கீதோபன்யாஸம் செய்வித்தார். பல கிராமங்களிலிருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் ச்ரவணம் செய்து இவ்வளவு லலிதமாக வேதாந்தத்தை இதுவரை எவரும் சொல்லிக்கேட்டதில்லை எனக் கொண்டாடினர். பாத்மபுராணத்திலிருந்து ஒவ்வோர் அத்யாயத்திற்கும் உள்ள கதைகளையும் உதாஹரணமாக 18 புராணகதைகளையும் நிகமாந்த தேசிகள் அருளிய ஸ்ரீகீதார்த்தஸங்க்ரஹ தமிழ் பாட்டுகளையும் கூறி ஸபையோர் மனதில் வேதாந்தம் பசுமரத்தாணிபோல் பதியும்படி கூறினர்.

விச்வரூபாவதாரத்தன்று மஹாஜனங்களுக்கு பாநக விநியோகம் செய்யப்பட்டது சில பெண்மக்களும் தலைவரும் உபன்யாஸகருக்கு வெள்ளிபாத்ரம் ஸம்மாநம் செய்தனர். முடிவன்று மறுநாள் ஸ்ரீ ஸுபத்ரா கல்யாண கதையை ஆக்நேயபுராண ரீதியாகக் கூறி கீதை 18 அத்யாயங்களையும் அதில் ஸமன்வயப்படுத்திக் கூறியதைச் கேட்டு எல்லோரும் ஆச்சர்யமடைந்தனர். அன்று பலர் பலவகையான ஸம்மாநம் செய்தனர். ஓர் பக்தர் உள்ளம் பூரித்து இக்கதாச்ரவணத்தால் தனக்கு வந்த அபமிருத்யு சென்றதாகக் கூறி தனியாக ஓர் ஸன்மானம் செய்தார் ஓர் பக்தர் இவ்வுபன்யாஸத்தை அப்படியே அச்சிட தீர்மானித்திருக்கிறார்.

வி. எஸ். ஜயராமன்.

ஜய பிரார்த்தனை

நாகூர்

நாகூர் மேல அக்ரஹாரத்தில், D. வீராசாமி அய்யரால் ஸ்தாபிக்கப் பட்டிருக்கும் ஸ்ரீ பஜனை மடத்தில் ஸ்ரீ ராமசந்திர மூர்த்தியினிடம். இப்பொழுது நடந்து வரும் யுத்தம் நமது சக்கிரவர்த்தி அவர்களுக்கு பரிபூர்ண வெற்றியை தரவேணுமாய் 16 தேதி ஞாயிற்றுக்கிழமை ராத்திரி திருவையார் ஸ்ரீ டி. எஸ். நாகராஜய்யரால் மிக உருக்கமாய் பஜனையும் திவ்யநாமங்களும் அர்ச்சனைகளும் நடத்தி விநியோகங்களும் செய்து ஜெயம் கிடைக்க பிரார்த்திக்கப்பட்டது.

(ந. கி)

பாரிஸ் நகரம் ஜர்மன் வசமாகியது

பிரஞ்சு தேசத்தின் பிரதான ராஜதானியான பாரிஸ் நகரமானது ஜர்மன் படைகளுக்கு வசமாகிவிட்டது. உலகநாகரிகத்திலேயே உன்னதமாகக் கருதப்படும் அந்த நகரத்தை அழிக்காமல் காக்கும் பொருட்டே பிரஞ்சுக்காரர் அதைக்காலி செய்து சென்றனர்.

பிரஞ்சு மந்திரி ஸபையும் கவர்ன்மெண்டும் வேறு முக்ய ஸ்தாபனங்களும் பாரிஸை விட்டு வேறு இடத்திற்கு கொண்டு போகப் பட்டிருக்கிறது.

மிஸ்டர் மேனேட் தலைமையிலுள்ள மந்திரி ஸபை ராஜிநாமா செய்துவிட்டதால் வேறு மந்திரி ஸபை அங்கு ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

C. S. DIKSHITAR & Co.,
Book-Sellers Kumbakonam.

Opinion of His Holiness Sri Kanchi Kamakoti Peetathipathi Sri Sankaracharya Swamigal on Kathakusumamanjari and Vikramarka charitram etc.

|| श्रीः ||

श्रीमत्परमहंस परिव्राजकाचार्यवर्य
श्रीमच्छंकरभगवत्पाद प्रतिष्ठित
श्रीकाञ्ची कामकोटिपीठाधिप जगद्गुरु
श्रीमच्चन्द्रशेखरेन्द्रसरस्वती श्रीपादैः
क्रियते नारायणस्मृतिः ||

पण्डितवरेण श्रीवेङ्कटरामशास्त्रिणा विरचितानि कुम्भघोणस्थेन श्रीमता सि. एस्. दीक्षितेन प्रकाशितानि च कथाकुसुममञ्जरी - विक्रमार्कचरित्र प्रभृतीनि देवभाषामयानि पुस्तकानि सादरमत्रलोकितानि । ललितमधुरया शैल्या निबद्धानीमानि हितोपदेशपराभिः पुराणकथाभिः समावर्जयन्ति संस्कृतं पिपठिषूणां चेतः । इमान्यासेतुहिमाचलं भारतवर्षे बहुत्र पाठ्यपुस्तकत्वेन स्वीकृतानि दृश्यन्ते। एतान्यास्तिकमतीनां संस्कृतपरिशीलनेच्छूना मत्यन्तमुपयुक्तानीति दृढमभिप्रेमः ।

एतै र्निबन्धैः सर्वेषां श्रेयःप्राप्तिः भूयादित्याशास्महे ||

मुकाम् कुम्भघोणम्
श्रीशा. श. १८६१ प्रमाथिसं.
कार्तिकशु. २ भानुवासरे.
नारायणस्मृतिः

A. SANKARAN M.A., PH.D., Superintendent of Sanskrit Schools.

MYLAPORE, Madras, 12th Sept 1939.

I have perused the works of Pandit Dikshit [illegible] jects are judiciously [illegible] the Puranas and Itihasas and the books are properly graded to suit the different classes of the High Schools. The language is simple, idiomatic and forceful and the stories are highly instructive and these are sure to mould the character of young minds.

I heartily commend the study of these books in schools.

(*Sd.*) A SANKARAN,
Superintendent of Sanskrit Schools, Madras,

C. S. DIKSHITAR & Co.,
request Head-masters of Schools and Sanskrit Patasalas to kindly prescribe the following books in their schools.

The books have been approved by the Text-book Committees of Cochin, Travacore, Madras and recommended by Mysore.

Eminent men like The Rt. Hon'ble V. S. Srinivasa Sastrigal, P. C., T. R. Venkatarama Sastrigal, C. I. E., Sir C. P. Ramaswamy Iyer, Dewan of Travancore, Professor P. P. S. Sastrigal, Dewan Bahadur K. S. Ramaswami Sastrigal and several others have very highly recommended them.

TAMIL

1.	Uttamar Charitam	I	0—3—0
2.	Do.	II	0—4—0
3.	Do.	III	0—5—0
4.	Do.	IV	0—5—0
5.	Do.	V	0—7—0

SANSKRIT (Devanagari)

6.	Subashithamanjari		0—6—0
7.	Kathakusumamanjari or A Ncsegay of Moral Stcries	P. I	0—8—0
8.	Do.	P. II	0—10—0
9.	Do.	P. III	0—8—0
10.	Vikramarka Charitram		0—8—0
11.	Bhoja Charitra Sangraha		0—4—0
12.	Sabdamanjari		0—5—0
13.	Prathamapatamanjari		0—5—0

Approved by several Text-book Committees and portions incorporated in the S. S. L. C. 1941 Sanskrit Text.

மதிப்புரை

“குரு ரமண வசனமாலை”

[பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷியவர்களின் வடமொழி உபதேசங்களுக்கு அப்பட்டமான தமிழ் மொழிபெயர்ப்பு கி. லக்ஷ்மண சர்மாவால் இயற்றப்பட்டது. அழகிய காகிதத்தில் சென்னை சாந்தி பிரஸ்ஸாரால் தெளிவாக அச்சிடப்பட்டது. விலை அணா 12]

இதுவோர் அரிய நூல். போர் முனையில் ஸ்ரீ கிருஷ்ண பகவானின் உபதேச மொழி எவ்வாறு பார்த்தனுக்கு புத்துயிர் அளித்ததோ, அவ்விதமே இந்நூல் முமுக்ஷுக்களுக்கு புதியதொரு உத்ஸாகத்தை ஊட்ட வல்லது. ஆத்ம விசாரமென்கிற மஹா யோகத்தின் ஸாதனங்களை போதிக்கிறபடியால் எல்லா ஞான யோகிகளுக்கும் இன்றியமையாதது. ஸத்குருவானவர் இந்நூலில் புகட்டும் விஷயங்களெல்லாம் அவருக்கு ஸ்வானுபவமாகையால் இந்நூலில் காணப்படும் பாஷை வெகு சுலபமாகவும், சுருக்கமாகவும் ரஸத்தோடு கூடியதாயும் காணப்படுகிறது.

எந்த மதஸ்தருக்கும் விரோதமில்லாமலிருந்தபோதிலும் இந்நூல் அடிப்படையாக அத்வைத வேதாந்தத்தையே தழுவி நிற்கின்கிறது. கர்ம, உபாஸனை, மார்க்கங்களில் அதிகஞ் சஞ்சரிக்காமல் அவைகளுக்கு அதீதமான ஞான யோகத்தையே விஸ்தாரஞ் செய்வதால் பாமர ஸாதகர்கள் கூட இந்த நூலில் சொல்லிய மார்க்கத்தை சுலபமாய் அனுஷ்டிக்கலாம் என்று நினைக்கக்கூடும். [illegible] வரையாக பகவான் ஸ்ரீ ரமண [illegible] ஆல் பிறப்பிலிருந்தே த்ருடவைராக்கியமும் அசஞ்சல ஈச்வர பக்தி ஏற்பட்டிருந்த வைபவமும், யதிரிச்சையாய் யேற்பட்ட ஸமாதிகளிலிருந்தே அவர்களுக்கு பூர்ண ஞானானுபவம் கிடைத்த விந்தையும் வரையப்பட்டிருக்கின்றன. இம்மாதிரியான பாக்கியம் எல்லோருக்கும் கிடைப்பதில்லை. ஆகையால் தான் கர்ம, உபாஸனை மார்க்கங்களில் அப்யாஸமில்லாமல் ஞானயோகத்தை பாமரர்கள் கையாளுகிறதில்லை. இந்தபோதத்தில் எல்லாருக்கும் தெரிந்த வார்த்தைகள் தான் உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றன ‘வைராக்கியம்,’ ‘பக்தி; ‘முக்தி; ‘அபேதம்’ இந்த பதங்கள் யாருக்குத்தான் தெரியாது? ஆனால் இந்நூல் லக்ஷண சாஸ்திரமில்லை. இப்பதங்களின் லக்ஷணங்களைத் தெரிந்து கொண்டு, ஹடயோகத்தால் இந்த பதங்கள் குறிப்பிடும் நிலைகளை ஸாதித்து விட முடியாது. இந்த பதங்களின் பொருள்கள் எவையாயிருந்தாலும், ஞான லக்ஷியங்களே ஒழிய, மனிதனுடைய பூர்ணானுபவ ஸ்திதியின் லக்ஷணங்களல்ல.

உதாரணமாக வைராக்கிய பகுதியில், “ஞானிகளால் நிச்சியிக்கப்பட்ட சுகதுக்க உண்மை இதுவே. மனம் வெளிநோக்கி இருத்தல் துக்கம். அதுவே உள்ளே நோக்கியிருத்தல் சுகம் “(42)” நித்திரை, மூர்ச்சை, வேண்டின பொருள் கிடைத்த ஸமயம், வேண்டாதது அழிந்த ஸமயம், இவற்றில் அனுபவமாகும் சுகம், ஆத்மாவில் மனம் கலந்திருப்பதால் உண்டாவது” (37) உலகஉருவாயும் தனக்கன்னியமாயும் உலகம் தோன்றாமல் ஒழிதல் ஞானமெனப்படும்; இந்த உலகம் சூன்யமென்று தெளித்து இதைத்துறத்தல் வைராக்கியமெனப்படும்” (47). காணப்படுகிறது. இதுமாதிரி நான் ஆவேனென்று ஸாதகன் பிரயாஸப்படுவது வீண்தான்.

பக்திபகுதியில், குருமொழி மௌனமாய் ஞானத்தையே சுட்டிக் காண்பிக்கின்றது. “எல்லாரிதயத்திலும் ஆன்மாவாய் பிரகாசிப்பதே இசனது அருள்” (103) எல்லா ஜந்துக்களினுள்ளும் ‘நான், நான்” என்று காமன் தானே விளங்குவதின் மூலமாய் ‘எங்கும் நான் ஒருவனே ஆத்மா’ என்று உபதேசிக்கிறான் (95) ‘நான், என்பதே இவனது பெயராவதால் நான், என்றே ஓயாமல் தியானிக்கிற ஸாது இதயத்தில் ஆத்மலோகமாகியதன் மூலஸ்தானம் சேர்ப்பிக்கப் படுவான் (108) „ஆத்மவிகாரத்தால் இதயத்தில் நான் என்பவன் அறுதியாய் அழியவே, எந்த பரிபூர்ண வஸ்து ஒன்றாய் விளங்குமோ, அதுவாய் நிலைத்திருத்தலே பரபக்தி (123) இந்த பக்தியை உபாஸனையென்று யார் சொல்லக்கூடும்?

மேலும் முக்திப்பகுதியில் பந்தப்பட்ட நான் யார்? என்ற விசாரயோகத்தில் பந்த மோக்ஷ எண்ணங்களின் ஒய்வே முக்தி பதவி யெனப்படும்„ (220) கலைபொங்கி ஓடும் வெள்ளத்தில் அற்பஜந்து தலையெடுக்க முடியாததுபோல், ஞானவெள்ளம் பொங்கும்போது அற்பமான அகந்தை எழமுடியாது (231) கிழக்கே சூர்யன் உதயமானால் சந்திரன் சிறிதும் பிரகாசிக்காமல் போவது போல் ஞானஸ்வரூபனான ஸூர்யன் உதித்தபோது ஜீவவீர்யங்கள் ஓயும் (234). இந்த முக்தி அனுபவமா? அல்ல அனுபவத்தின் இறுதியா? முக்தியென்றால் விடுதலையென அர்த்தமென்று நினைப்பவர்களெல்லாம் இந்த நூலிலிருந்து [illegible] யளித்து விடுதலை யடை[illegible]வது?

எள்ளின் குண விசேஷம்

எள்ளு இந்தியர்களால் அநேக நூற்றாண்டுகளாக உபயோகிக்கப்பட்டு வரும் நவதான்யங்களுள் ஒன்று. எள்ளில் கருப்பு, வெளுப்பு, சிவப்பு முதலிய பல பேதங்களுள் அதில் கருப்பு எள்ளுதான் சிரேஷ்டம். உத்தமமானது. வெளுப்பு மத்யமானது; மற்றவை அதமமானது, சர்வசாதாரணமாக எள்ளிற்கு மயிரை வளரச் செய்தல், சரீரத்துக்குப் பலத்தை உண்டுபண்ணுதல் நாவுக்கு ருசி யுண்டுபண்ணல், மலச்சிக்கலை நீக்குதல், சரீரத்திலுள்ள ரசாதி சப்த தாதுக்களிலுள்ள ரணங்களை ஆற்றல், பற்களைக் கெட்டிப்படுத்தல், வாயுவைக் கண்டித்தல், புத்திக்குத் தெளிவு உண்டு பண்ணல், முதலிய குணங்களுண்டு. கறுப்பு நிறமான எள்ளை ஒருவர் தினந்தோறும் ஒரு பலம் (அரைப்பலம் முதல் ஒரு பலம் வரை) சாப்பிட்டு, அதன் மேல் ஒரு டம்ளர் நல்ல சுத்த ஜலம் சாப்பிட்டு வந்தால், சரீரத்திற்கு அதிகமான புஷ்டி ஏற்படுவதுடன் ஆயுட்காலம் வரையில் பற்கள் யாதொரு விதமான கெடுதியும் அடையாமல் கெட்டியாயிருக்கும்.

கல்கத்தா நகரிலே பிரசித்தி பெற்ற டாக்டாரயிருந்த காளிசரண போஸ் எள்ளின் அபார குணத்தை நன்றாக எடுத்துக் கூறியுள்ளர். அவர் கூறுவதாவது:- “புராதன ஔஷதிகளில் எள்ளும் ஒன்று. தாதுவை பலப்படுத்தி நாவுக்கு ருசி யுண்டு பண்ணுகிறது. நவ நாகரீகத்தால் எள்ளை சாதாரணமாக நினைத்து விடுகிறோம். இனி மேலாவது எள்ளின் அபார குணத்தை அறிந்த பிறகாவது எள்ளையும் எள் எண்ணையையும் உபயோகப் படுத்துவார்களாக.” ரவீந்திரநாத் தாகூர் எள்ளைப்பற்றி விசேஷமாக புகழ்ந்து மனிதர்களுக்கு மிக்க பலமுண்டு பண்ணக்கூடிய தானிய வகைகளில் எள்ளு மிகவும் சிரேஷ்டமானது என்று கூறியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

எள்ளு லேகியம்

குழந்தைகளுக்கு வரும் கக்குவான் இருமலுக்கும், சூதகச் சிக்கலுள்ள ஸ்திரீகளுக்கும் “எள்ளு லேகியம்” விசேஷ குணம் தரும். குழந்தைகளுக்கு வரும் கக்குவான் இருமலுக்கு கறுப்பு எள்ளும், பனை வெல்லமும் சமனிடையாய் எடுத்து இடித்து லேகியமாய் செய்து கொண்டு, வயது, முதலியவற்றிற் கேற்றவாறு, சுண்டக்காய் அளவு முதல் நெல்லிக்காய் பிரமாணம் வரையில், தினம் மூன்று வேளை விதம் 6 தினம் கொடுத்துவர கக்குவான் இருமல் கட்டாயம் குணப்படும். சூதகச் சிக்கலுள்ள ஸ்திரீகள், பெரும்பாலும் எள்ளை உபயோகித்து வருவதுடன், லேகியத்தையும் சாப்பிட்டால் சூதக வாயு என்ற கொடிய ரோகத்தினின்றும் விடுபடலாம்.

எள்ளு எண்ணை

நல்ல எண்ணையானது இளைத்த சரீரமுள்ளவர்களுக்கு புஷ்டியையும், அதிஸ்தூல மானவர்களுக்கு இளைப்பையும், உள் உபயோகத்தால் உண்டு பண்ணும் என்பது கவனிக்கத் தக்கது. வயிற்றிலுள்ள பூச்சிகளை அழிக்கும். மலச் சிக்கலையும் போக்கும்.

கோப்பளித்தல்

நல்ல எண்ணையை தினந்தோறும் வாயில் விட்டுக் கொப்பளித்தலால் (கண்டுஷம்) இரண்டு தாடைகளுக்கும் பற்களுக்கும், ஸ்வரத்திற்கும் பலம், முகத்திற்குத் தெளிவு, அறுசுவை யுண்டிகளைப் புசிக்கும்போது [illegible] சுவையை நன்றாய் அறிதல், [illegible] அது ஆவல, [illegible] உலர்ந்து போகாமல் இருப்பது, உதடுகள் வெடிப்பில்லாமை, பற்களுக்கு பலம், கெட்டியாயிருத்தல், மற்றும் பல்வலி’ பல்கூச்சம் முதலியன அல்லாமை, எப்பேர்ப்பட்ட கடினமான பொருவிளங்காய் உருண்டையையும் மற்றும் அதிக கடினமான பக்ஷண வகைகளையும் கூட கடித்து புசிக்கக் கூடிய சக்தி முதலியவைகள் உண்டாகின்றன. இதை ஒவ்வொருவரும், நன்றாக கவனித்து தினந்தோறும் “தைல கண்டுஷத்தை” நிறைவேற்றிவரின் மேற்கூறிய அபார குணங்களை அடைவதுடன், ஆயுட்காலம் வரையில் பல் வைத்தியர்கள் உதவியை நாடாமல் இருக்கலாம் என்பது உறுதி.

எள்ளுப் பிண்ணாக்கு

எள்ளுப் பிண்ணாக்கு சப்த தாதுக்களைப் பற்றிய ரணம், சொரி, சிரங்கு, நமச்சல், கரப்பான், புண் முதலியவைகளைப் போக்கும்.

எள்ளோதனம்

எள்ளோதனம் அதாவது எள்ளுச்சாதம் சாப்பிடுவதால் வாதபித்ததுவந்தம் விலகும், கபாதிக்கமும் குறையும் தேகத்திற்கு வலுவும் உண்டாக்கும். எளளோதனம் செய்வது சுலபம்.

எள்ளைக் கல்லுப்போக அரித்தெடுத்து; பாணலியில் போட்டு நன்றாக சிவப்பாக வறுத்தெடுத்துக் கொள்ள வேண்டும். கொஞ்சம் மிளகாய் வத்தலையும் வறுத்தெடுத்துக்கொண்டு எள்ளையும், உப்பையும் போட்டு நன்றாக இடித்துஎடுத்துவைத்துக் கொள்ளவும் சாதத்தை அளியாமல் நன்றாக வடித்தெடுத்து, ஷை பொடியைப் போட்டு போதுமான நல்ல எண்ணையை விட்டு நன்றாக கலக்க வேண்டும். (செட்டி நாடு)

முப்பாற்சாரம்

கடவுள் வாழ்த்து

(வித்துவான் ப.ரே. திருமலை அய்யங்கார்)

கடவுள் வாழ்த்தாவது கவிதான் வழிபடுங் கடவுளையாவது எடுத்துக்கொண்ட பொருட்டு ஏற்புடைய கடவுளையாவது வாழ்த்துதலாம். 'கடவுள் வாழ்த்து' எனும் தொடர் வேற்றுமைப் புணர்ச்சி, இரண்டாம் வேற்றுமைத் தொகை. மக்களின் மனம், வாக்கு, காயம் என்னும் இம்மூன்றுக்குமே எட்டாமல் கடந்துள்ளமைபற்றி இறைவனுக்குக் கடவுள் எனும் பெயர் எய்தியது என்பர். கடவுள் என்பது, தொழிலாகு பெயராய் வந்த காரணக்குறி, இதனில் உள் தொழிற்பெயர் விகுதி: அன்றி, தொழிலாகு பெயராய் வந்தசொல் என்னுமல், 'உள்' எனும் வினை முதற் பொருள் விகுதியேற்ற பெயர் எனினும் பொருந்தும். வாழ்த்து-வாழ் எனும் தன் வினைப் பகுதியின் பிறவினை முதனிலைத் தொழிற்பெயர். இங்கே வாழ்த்துதல் என்னும் வாக்கின் தொழில் மனத்தின் தொழிலாகிய நினைத்தலையும், காயத்தின் தொழிலாகிய வணங்குதலையும் குறிப்பிக்கும்: இதனை உபலக்ஷணம் என்பர் வடமொழிவாணர். வாழ்த்து வாழ்த்துதலைத் தெரிவிக்கும் செய்யுளுக்குத் தொழிலாகு பெயர்.

நூலாசிரியர் தாமெடுத்துக்கொண்ட நூலிற் கூறும் விஷயத்திற் கேற்ப நூன்முகத்திற் கடவுள் வாழ்த்துக் கூறுது தாம் வழிபட்டு வருங்கடவுளை வாழ்த்துதல் வழிபடு கடவுள் வாழ்த்தாம். அவ்வாசிரியர் நூன்முகத்தில் நூலிற்கூறும் விஷயத்திற் கேற்பக்கடவுளை வாழ்த்துதல் ஏற்புடைக் கடவுள் வாழ்த்தாம். அவற்றுள் முப்பாற் கடவுள் வாழ்த்து ஏற்புடைக் கடவுளைக் குறித்ததாம். சத்துவ முதலிய முக்குணங்[illegible] பொருள இன்பமென மூன்றாகிய உறுதிப் பொருளுக்கு அம்முக்குணங்களால் அரியயனரனென மூவராகிய முதற் கடவுளோடு சம்பந்த முண்டாயிருத்தலின் அம்மூன்று பொருள்களையும் சொல்லத் தொடங்கிய திருவள்ளுவ நாயனர்க்கு அம் மூவரையும் வாழ்த்துதல் முறைமை யாதலின் இவ்வாழ்த்து அம்மூவருக்கும் பொதுப்படக் கூறினரென்ப.

உணர்ந்துணர்ந்திழிந்தகன்று உயர்ந்துருவியந்த இந்நிலைமை, உணர்ந்துணர்ந்துணரிலும் இறை நிலை உணர்வரிது உயிர்காள்!, உணர்ந்துணர்ந்து துரைத்து அரியயனரெனென்னும் இவரை, உணர்ந்துணர்ந்துரைத்துரைத்து இறைஞ்சுமின் மனப்பட்ட தொன்றே (திருவாய்மொழி 1—3—6) என்ற ஆழ்வார் பாசுரம் இவண் அநுஸந்தேயம்.

இவ்வதிகாரத்தின் முதற்பாட்டால் முதற் கடவுளதுண்மையும், இரண்டாம் பாட்டால் ஆகமவறிவிற்குப்பயன் அவன்றாளைத் தொழுது பிறவியறுத்த லென்பதும் (ஆகமமென்பன மனுமுதலாகிய, வற்றேரு புணர்ந்ததிறனறி நூலே) மூன்று முதல் ஆறுவது ஈறுகவுள்ள நான்கு பாட்டானும் அவ்வின்றவனை நினைத்தலும் வாழ்த்தலும் அவனெறி நிற்றலுஞ் செய்தார் வீடு பெறுவா ரென்பதும், ஏழு முதல் ஒன்பதாவது இறுதியாகவுள்ள மூன்று பாக்களால் அவனை நினைத்தலும் வாழ்த்தலும் வணங்கலும்செய்யா விடத்துண்டாகின்ற குற்றமும், பத்தாவது பாட்டால் உலகியல்பை நினையாது இறைவனடியையே நினைப்பாக்குப் பிறவியறுதலும் அவ்வாறன்றி மாறி நினைப்பார்க்கஃதருமையும் ஆகிய இரண்டும் நியமிக்கப்பட்டன வென்பர் பரிமேலழகியார்.

இனி முறையே பாக்களின் சாராம்சமாவது:-- (1) எழுத்துக்களெல்லாம் அகரத்தை முதலாக உடையன. அதுபோல உலகம் ஆதிபகவானுகிய முதலையுடைத்து. (2) மெய்யறிவுடைய கடவுளது நல்ல அடிகளை வணங்காராகில் எல்லா நூல்களையும் கற்ற மனிதர்க்கு, அக்கல்வி அறிவினுல் உண்டாகிய பயன் சிறிதும் இல்லை. (3) அன்பரது நெஞ்சமாகிய தாமரை மலரில், அவர் நினைந்தவடிவத்தோடு விரைந்துசென்று தங்குபவனுகிய கடவுளது மாட்சிமைப்பட்ட திருவடிகளை இடைவிடாது நினைக்கின்றவர், எல்லா உலகங்கட்கும் மேலாகிய வீட்டுலகின்கண் அழிவின்றி வாழ்வார்கள் (4) விருப்பும் வெறுப்பும் இல்லாத இறைவனது திருவடிகளை இடைவிடாது சிந்திப்பவருக்கு, எக்காலத்திலும் பிறவித்துன்பங்கள் உண்டாகா. பிறவித்துன்பங்களாவன:— தன்னைப்பற்றி வருவனவும் பிற உயிர்களைப்பற்றி வருபனவும் தெய்வத்தைப்பற்றி வருபனவும் என மூவகையான வருந்துன்பங்கள். இவற்றை வடநூலார் ஆதியான்மிகம், ஆதிபௌதிகம், ஆதி தைவீகம் என்ப. (5) கடவுளது உண்மையானபுகழை இடைவிடாது விரும்பிச் சொல்பவரிடத்து, அறியாமையால் வருகின்ற நல்வினை, தீவினையாகிய இருவினைகளும் அடையாவாம். (6) ஐம்பொறிகளின் வழியாக எழும் ஐந்து வகை ஆசைகளையும் நீக்கின கடவுளது மெய்யான ஒழுக்கவழியிலே வழுவாது நின்றவர், பிறப்பில்லாமல் எக்காலத்திலும் ஒரு தன்மையராய் வாழ்வார். (7) ஒரு வகையினுலும் தனக்கு நிகரில்லாத கடவுளது திருவடிகளையடைந்தவர்க்கேயல்லாமல், தமது மனத்தின் கண் உண்டாகும் துன்பங்களை நீக்கிகொள்ளுதல் மற்றெவராலும் முடியாது. (8) அறக்கடலாகிய கடவுளது திருவடியாகிய மரக்கலத்தைச் சேர்ந்தவர்க்கல்லாமல் [illegible] கிய இரு கடல்களையும் கடத்தல் அரிது. (9) தத்தமக்கேற்றபுலன்களைக்கொள்ளுதல் இல்லாத பொறிகள் போல, எண்குணனுகிய கடவுளது திருவடிகளை வணங்காத தலைகள் பயனில்லாதனவாம். (10) இறைவனது திருவடியாகிய மரக்கலத்தைச் சேர்ந்தவர். பிறவியாகிய பெரியக்கடலைக் கடப்பார்; அதனைச்சேராதவர் கடக்கமாட்டார்.

இறைவனைக்குறிக்கும் சொற்றொடர்கள் நன்கு உய்த்துணர்தற்குரியன. அவையாவன:— (1) ஆதிபகவன் (2) வாலறிவன். (3) மலர்மிசை ஏகினன் (4) வேண்டுதல் வேண்டாமை இலான் (5) இறைவன் (6) பொறிவாயில் ஐந்தவித்தான் (7) தனக்குவமை இல்லாதான் (8) அறிவாழி அந்தணன் (9) எண்குணத்தான்.

(1) பகவான் என்னும் வடமொழிவிகாரமே பகவன். பகம் என்பது ஆறுகுணங்களைக்குறிக்கும். அவையாவன:— நிறைந்த மகிமை, தைரியம், கீர்த்தி, ஐசுவரியம், ஞானம், வைராக்யம், இந்த ஆறு குணங்களையுமுடையவன் பகவன். ஷாட்குண்ய பரிபூர்ணன் ஸ்ரீமந் நாராயணன். ஆதி பகவன்'— ஜகத்காரணவஸ்து (நிமித்தோபாதான காரணம்) அந்தமிலாதியம்பகவன் வணக்குடைதவநெறி' (திரு 1-3-5) யை நோக்குக. (2) வாலறிவன்- ஸர்வஜ்ஞன். (3) "மனனக மலமற மலர்மிசை யெழுதரும்' என்பது ஆழ்வார் பாசுரம். (4) கொள்கை கொள்ளாமையிலாதான் எள்கலிராகமிலாதான் (திரு 165 (6) பொறி வாயில் ஐந்த வித்தான். இருஷீகேஷன் எனும் வடமொழிப் பெயரின் மொழி பெயர்ப்பு. (7) "இடுபெடுப்புமிலிசன்'' (திரு 1 6 3;) "தானே தனக்குவமன்'' (மூன்றுந்திருவந்தாதி 38) தருமசக்கரத்தையுடைய அந்தணன். "அறவனை ஆருப்படை அந்தணனை'' (திரு 1, 7, 1) என்பது நோக்குக. நெற்றிமேல் கண்ணனும் நிறைமொழிவாய் நான் முகனும் நீண்டநால்வாய், ஒற்றைக்கை வெண்ப கட்டினெருவனையும் உள்ளிட்ட அமரரோடும், வெற்றிப் போர்கடலரையன் விழுங்காமல் தான் விழுங்கி உய்யக்கொண்ட கொற்றப் போராழியான்'' என்பது அறிவுதரும் பெரியதிருமொழி (11, 6, 3) (9) எண்குணத்தான். மிகவும் கண்ணியமாக எண்ணப்படும் சாத்விக குண சம்பூர்ணன். கல்யாணகுணகண மஹோததி. "எண்பெருக்கந்நலத்து, ஒண்பொருளீறில், வண்புகழ் நாராயணன்'' (திரு1, 2, 10) "எட்டுமெட்டுமெட்டுமாய் ஓரேழு மேழு மேழுமாய், எட்டு மூன்று மொன்றுமாகி நின்ற ஆதிதேவனை, எட்டினய பேதமோடு இறைஞ்சி நின்று அவன் பெயர், எட்டெழுத்தும் ஓதுவார்கள் வல்லர்வானமாளவே'' என்பது திருச்சந்த விருத்தம் [77]

திருவடி தொழிலின் பெருமையினை நன்குரைத்துள்ளார் இவ்வதிகாரத்தில். திருவடியைக் கூறுமிடத்து [2] நற்றாள் (3) மாணடி [7] தாள் என்கிருர்.

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

ஜனங்களை தயாரிக்கவேண்டும். இவ்விஷயத்தில் கோவிலூர், மதுரை, ராமேஸ்வரம் முதலிய இடங்களில் ஏற்படுத்தப்பட்டு தார்மிக யுவர் சங்கமென்ற பெயரால் அழைக்கப்படும் ஸ்தாபனமானது இன்றியமையாத சாதனமாகும். ஷை ஸ்தாபனத்தை தென்னிந்தியாவில் பல இடங்களில் ஏற்படுத்தி சங்கத்தின் பெயரை ஸார்த்தகமாக ஆக்குமுயலுவது ஒவ்வொருமதாபிமானியான வாலிபர்களின் கடமையாகும்.

ஓர் சந்தேகம்

அநுபந்தனுக்கு ஆசௌசம் உண்டா? அவ்வித ஜனனுதி ஆசௌசங்களில் அநுபந்தனுடைய மாதாபிதாக்கள் சிராத்தம் நேர்ந்தால் ஷை தீட்டுபோன பிறகு செய்கிறதா அல்லது திதியிலே செய்கிறதா! இது ரொம்பவும் அவசியமான சமாசாரம். தர்மஞர்கள் தயவு செய்து சிரமத்தை பார்க்காமல் உலக நன்மைக்காக பதில் தெரிவிக்கப் பிரார்த்திக்கிறேன்.

மற்றொரு சந்தேகம்

ஸ்வீகாரம் போனவர்கள் தன் ஜனக கோத்திரத்தில் உண்டான கன்னிகையை சாஸ்திரப் பிரகாரம் கல்யாணம் செய்து கொள்ளலாமா? பெண்ணுக்கு வயதாகி செய்து கொண்டு விருஷனி பதியாகிற இக்காலத்தில் கிரமமாக இருக்கிற கன்னிகையை செய்து கொள்ள ஜனன கோத்திரம் பாதகமில்லையென்று சில சாதாரண பேர் வழிகள் நினைக்கிருர்கள். இது விஷயம் ஞாயமாக தெரிவிக்கும்படி மஹான்களை வணக்கமாக கேட்டுக்கொள்கிறேன்.

நீலகண்ட சாஸ்திரி, நன்னிலம்.

தர்ம சாஸ்திரச் சுருக்கம்

பிராம்ணர்களின் கர்மானுஷ்டானங்களை விவரிக்கும், வைத்தியநாத தீக்ஷிதீயம்' என்ற தர்ம சாஸ்திரத்தின் ஆறுகாண்டங்களையும் சங்கிரகமாய் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராமணக் குடும்பங்களிலும் இருக்கவேண்டியது. விலை ரூ. 1—8—0 (வி. பி. பிரத்யேகம்.)
கிடைக்குமிடம்:— S.J.P.W., LTD., KMU.

போலிகள் ஜாக்கிரதை!

அமிர்தாஞ்சனம்

எல்லா வலிகளுக்கும் துன்பங்களுக்கும் கைகண்ட இந்தியமருந்து இதுவே.

ஆயிரக்கணக்கானவர்கள் விற்கிறார்கள்

* * *

அமிர்தாஞ்சன் லிமிடெட்,

படை மருந்து

தேம்பல், படை முதலிய வியாதிகளைத் தீர்க்கும்.

வில்லிவாக்கத்தில் மீண்டும் விஷமம்.

சென்ற வைகாசிமீ வெள்ளிக்கிழமை ராத்திரி ஸ்ரீஸௌமியதமோதா பெருமாளுக்குப் பிரம்ம உத்ஸவத்தில் 5வது நாளாகிய அனுமாரின் வாகனத்தில் பெருமாள் வீதியில் எழுந்தருன சமயத்தில் அவ்வூரிலிருக்கும் பஞ்சமர்கள் மறுபடியும் தட்டில் தேங்காய் முதலானது கொண்டுவந்து ஆரத்தி செய்யும்படி நிர்ப்பந்தம்செய்தார்கள் அந்த ஸமயத்தில் அவ்வூர் அர்ச்சகர் முதலாவது உற்சவமே ஆரத்தி செய்ய முடியாதென்று சொல்லி அவர் மறுபடியும் இது வரையில் வழக்கமில்லை என்றும் சொல்லிவிட்டார் [illegible] அவ்வூர் மனிசிப்பும் தர்மகர்த்தாவு ரெட்டியார் [illegible] ஜனங்கள் [illegible] மாய் வற்புரித்தி தேங்காய் உடைத்து நிவேதனம் செய்யும்படி ரொம்பவும் நிர்பந்தம் செய்தார்கள் அந்த ரெட்டியார் எவ்வளவு சமாதானம் சொல்லியும் கேஷ்காமல் தாங்களே வாகத்தின் மேல் எரிதிவேதன்மடுக்கிரேன் என்று அர்சகரை ஆபத்துக் கிடமான பேச்சுக்களை துர்பாஷையாய் பேசியும் வற்புறுத்தினர்கள். உடனே அந்த ரெட்டியார் தேங்காயை உடைத்து ஆர்த்தி செய்தார். அப்போது அந்த சன்னதி அர்சகரும் பிரபல ஸனதனியுமான ஸ்ரீமான். உ. வே ராமகிருஷ்ண பட்டாசாரியர் பெருமாளுக்கும் அர்சார்களுக்கும் திருவாபரணத்திர்க்கும், ஆபத்துக் கிடமான சமயத்தில் தைரியமாய் நின்று போலீஸ் ஸ்டேஷனுக்கு போய் பந்தோபஸ்துக்காக ரிபோர்ட் செய்ய போனர் த்த்சமயம் இருந்து போலீஸாரும் பந்தோபஸ்துக்காக இருக்கலானர்கள் சுமார் 10 போலீஸ் ஜவான்கள் வந்து அர்ச்சகரை அழைத்து மேல் நடக்க வேண்டிய திருவீதி புறப்பாடுக்கு வரும்படி சொல்ல பிறகு உத்ஸவம் மிக விமர்சையாக நடந்து பூர்த்தியாகி விட்டது. மேல்கண்ட தினம் நடந்த விஷயத்தை பத்தியும் சப் இன்ஸ்பெக்டருக்கு ரிபோர்ட்டும் கொடுக்கப்பட்டது. அதற்கு அவர்கள் அங்கீகரித்து மிகவும் பந்தோபஸது செய்து அதில் முக்கியமான சில பேர்களை கைது செய்து பெருமாளுக்கு எந்தவிதத்திலும் குறைவு இல்லாமல் அதிவிமர்சையாய் உத்ஸவத்தை நடத்திவைத்தார்கள் இவ்வளவுக்கும் காரணம் தர்மகர்த்தாவாக இருந்த பி. எஸ் பாழியம் செட்டியார் பலத்தினுலும் தர்மகர்த்தாவாக இருந்தும் அவர்களுக்கு பிரசங்கம் செய்தும் தூண்டுதல் செய்ததினுலும் இப்பேர்ப்பட்ட சம்பவம் ஏற்பட்டது. ஸன்னதிக்கு பெருமாள் வந்ததும் தர்மகர்த்தாவால் விசேஷமாக ஸம்புரோக்ஷணையும் நடந்தது. மறுநாள் புறப்பாடு காலை 6 மணிக்கு நடக்கவேண்டியது மாலை 4 மணிக்கு நடந்தது. சை. கி. பட்டசாரி.

௳

ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜெகத்குரு ஸ்ரீசங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்கள் ஸ்ரீ மடம் சிஷ்யகோடிகளுக்குக் கொடுத்த

ஆக்ஞா ஸ்ரீமுகம் பிரகாரம்:

திருவாரூர்

ஸ்ரீ தியாகராஜப்பெருமானுக்கும்

ஸ்ரீவல்மிகநாதர் முதல் பஞ்சமூர்த்திகளுக்கும்

136 குடம் கங்காதீர்த்தம் பிரயாகையிலிருந்து தருவித்து மஹாஅபிஷேகத்தை நாளது விக்ரமஞு ஆனிமீ 22௳ (5—7—40) முதல் ஆனிமீ 32௳ தேதி (15—7—40) ஸோமவாரம் முடிய, 136 வைதீகர்களைகொண்டு ஸ்ரீமஹா ருத்ர பாராயணம் செய்வித்து தக்ஷிணயனபுண்யகாலம் ஸமயம் அபிஷேகம் செய்விப்பதென்றும் இந்த 12 நாளிலும் அன்னதானம் செய்வதென்றும் தீர்மானித்திருப்பதாலும், இந்த கைங்கர்யமானது மஹாஜனங்களின் க்ஷேமத்தையும் துர்[illegible] நீங்கவும், ராஜாங்க க்ஷேமத்தையும் உத்தேசித்து நடத்தப்படுகிறது. [illegible] கண்காணப்படவில்லை. ஒருசமயம் இராஜாக்களால் நடத்திவைக்கப்பட்டிருக்கலாமோ தெரியவில்லை இதற்கு ஏராளமான பொருள் தேவை என்பது யாவருக்கும் தெரிந்த விஷயமே தர்மம் என்பது கேட்டும், கேளாமல்தானகவே செய்ய முன்வருவதே சுத்தமான தர்மமென்பது எல்லோரும் அறிந்த விஷயம். ஜெகத்தில் தர்மிஷ்டர்கள் ஏராளம் ஒவ்வொருவரையும் அணுகி நேரில் போய் தெரிவித்து கேட்பதென்பது சிரமமான கார்யம் ஆகையால் கேளாமல் செய்வதே உத்தமம் மென்பதைஅனுஸரித்து தங்களால் இயன்றதை பணமாகவோ அன்னதானத்துக்குரியஸ மக்கிரியைகளாகவோ அடியில்கண்ட விலாசத்துக்கு நேரிலோ மனுஷியாள் மணிஆர்டர் மூலமாகவோ அனுப்பியும் கூட இருந்து இந்த தர்மதை நடத்திவைத்து கிருதார்த்தர்களாகவும் ஈசுவர அனுக்றஹத்தை அடையவேணுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

விலாஸம்

பழனிசிவன்,

9நெ. ஸன்னதித்தெரு திருவாரூர். S.I.'R

மஹாபாரத ஸமாப்தி

நன்னிலத்திற்கு அருகிலுள்ள நல்லமாங்குடியில் 2 வருஷகாலமாக ஸ்ரீ மஹாபாரத பிரவசனம் கிரந்தம் முழுமையும் படனம் செய்து கொண்டு வந்தஸ்ரீ சுப்பய்யா சாஸ்திரி அவர்களால் நடத்தப்பட்டு விக்ரம வருஷம் வைகாசி மாதம் 20 தேதி கதை பூர்த்தியானது. கோபாலனுடைய அனுக்கிறகத்தாலும் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளுடைய பூர்ண அனுக்கிரகத்தாலும் பிரும்மண சந்தர்பணை முதலியவைகளோடு நிறைவேறியது. இவ்வளவுக்கும் முக்ய காரணம் நல்லமாங்குடி ஸ்ரீமான் பென்ஷனர் கலெக்டர் ஆபீஸ் ஹெட் கிளார்க் கே. ஆர். முத்துகிருஷ்ண அய்யர் அவர்களுடைய பெருதவியும் மற்றுமுள்ள பக்திமான்களுடைய சிரத்தையும் பாராட்டத்தக்கது ஷை அய்யர் அவர்கள் நல்லமாங்குடியில் வேத பாடசாலையை 3 வருஷகாலமாக ரொம்பவும் சிரத்தையாய் நடத்தினர்கள். இவரே தண்ணீர் பந்தல் தர்மம் செய்து வருகிருர்கள் ஷை யூரில் லோக க்ஷேமமாக 3 வருஷகாலமாக விஷ்ணு ஸஹஸ்ர நாம பாராயணம் தினம் பிரதி விடாமல் நடத்தி வருகிருர்கள் எல்லாம் ஷை அய்யருடைய வைராக்யமும் சிரத்தையும் காரணம்.

கிருமவாசிகள்

Printed by S. Kalyanasundaram at the Sri Janardhana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam
Published by A. Gopaladesikachariar and S. Kalyanasundaram.